ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

2019/2020

# வளர் தமிழ் 5

## பயிற்சி 6

பெயர் ____________________________________________

*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**

## இசைக்கருவிகள்



- இசைக்கருவிகளைத் தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி, வெண்கலக்கருவி என நான்காக வகுப்பர்.
- விலங்குத் தோலினால் செய்யப்பட்ட இசைக்கருவிகளைத் தோற்கருவிகள் என்பர்.
- உடுக்கு, தண்ணுமை, மத்தளம், பறை போன்றன தோற்கருவிகளாகும்.





- வயலின், வீணை, யாழ் என்பன நரம்புக்கருவி வகைகளைச் சேர்ந்தன.



- புல்லாங்குழல், ஏழில் போன்றன துளைக்கருவிகளாகும்.
- தாளம் வெண்கலக்கருவிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.



- யாழும், குழலும் பழைமையான இசைக்கருவிகளாகும்.
- விபுலாநந்த அடிகள் யாழ் நூலை எழுதினார்.
- யாழ் இசைப்பவரைப் பாணர் என அழைப்பர்.
- இசைக்கருவிகள் பற்றிச் சிலப்பதிகாரத்திலும் ஆற்றுப்படை நூல்களிலும் கூறப்பட்டுள்ளன.

2. **வாசித்தல்**

மாந்தனால் உருவாக்கப்பட்டு செயற்கையாக உலகைச் சுற்றி வரும் கோள் செயற்கைக் கோள் எனப்படும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் இருந்தே அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகள் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருகின்றன. இன்று பல்வேறு நாடுகளும் போட்டிபோட்டுக் கொண்டு அறிவியல் ஆய்வில் ஈடுபடுகின்றன. இதனாற் பல செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி வருகின்றன. எங்கள் தலைக்கு மேல் பல்லாயிரக்கணக்கான செயற்கைக் கோள்கள் சுற்றியபடியே இருக்கின்றன. இவை தகவற்றொடர்பு, உலகைப் பற்றிய ஆய்வு, முன்கூட்டியே இயற்கை நிகழ்வுகள் பற்றி அறிதல் போன்றனவற்றுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. தொலைபேசி உரையாடல்கள் இச்செயற்கைக் கோள் வழியாகவும் செல்கின்றன.

3. **பாடச் சொற்கள் (<u>பாடம் 6</u>)**

காலநிலை - Climate

குமுகாயம் - Society

புலால் - Meat

வரண்ட - Dry

சூழல் - Ambience

பெருமளவு - Mostly

தினை - Millet

நிலையான - Stable

அமைதி - Calm

ஆக்கல் - Creation

4. **தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| தளை | தழை | விலை |
| விளை | விழை | |

- உழவர் இந்த ஆண்டு நல்ல ________________ச்சலைப் பெற்றனர்.
- நான் ஈழத்துக்குச் சென்று வாழ ________________கின்றேன்.
- ஆடு இலை ________________களை விரும்பித் தின்னும்.
- உழவன் மாட்டை மரத்தில் ________________த் தான்.
- பொருட்களது ________________ நாளுக்கு நாள் உயர்ந்து செல்கிறது.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

5. **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- காடும் காடு சார்ந்த இடமும்

  (மருதம், குறிஞ்சி, முல்லை)

- தைப்பொங்கலை ________________ என்றும் அழைப்பர்.

  (உழவர் திருநாள், மாட்டுப்பொங்கல், போகிப் பொங்கல்)

- வேளாளர் என்ற சொல் குறிப்பது ________________.

  (அறிஞர், ஆசிரியர், உழவர்)

- மழை பெய்யும்போது வானம் ____________________ இருக்கும்.

  (கருமையாக, கறுமையாக, வெறுமையாக)

- ஆடற் ____________________ மனதுக்கு இன்பம் தரும்.

  (காலை, களை, கலை)

- விழா நிகழ்விகளின் ________________ நன்றியுரை இடம்பெறும்.

  (தொடக்கத்தில், இறுதியில், இருதியில் )

- மாடுகள் கட்டும் இடம் ________________.

  (முற்றம், கொல்லை, தொழுவம்)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

- ஊருக்கு நடுவே உயர்ந்து நிற்கும்; உருவங்கள் பலவும் தாங்கி நிற்கும்; உச்சியில் குடம் தரித்திருக்கும். அது என்ன?

  (கவசம், கம்பம், கோபுரம்)

- முயல்கள் துள்ளித்துள்ளிப் __________________.

  (பாய்ந்தன, பாய்கிறது, பாய்ந்தது)

- நகுதல் என்ற சொல் குறிப்பது

  (அழுதல், சிரித்தல், கோவப்படுதல் )

- சிற்பக்காடு எனப் புகழப்படுவது _______________.

  (சிகிரியா, மாமல்லபுரம், மாவிட்டபுரம்)

- குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் மாறுவதால் ஏற்படுவது________________.

  (பாலை, நெய்தல், மருதம்)

- தமிழ்மொழியில் முதல் எழுத்துகளின் எண்ணிக்கை ___________________.

  (12, 18, 30)

- குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் நிலங்களை எவ்வாறு கூறுவர்?

  (மாநிலம், நானிலம், நன்னிலம்)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

6. **பின்வரும் சொற்களை தமிழில் மாற்றி எழுதுவோம்.**

- Mother ______________________
- Dress ______________________
- Rehearsal ______________________
- Run ______________________
- Gift ______________________
- Weight ______________________
- Guess ______________________
- Body ______________________
- Teacher ______________________
- Swan ______________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**7. பாட வினாக்களுக்கு விடை தருக.**

- நண்பர்களுக்குத் துன்பம் வரும்போது எவ்வாறு உதவ வேண்டும்?

______________________________________________

______________________________________________

- பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன?

______________________________________________

______________________________________________

- ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற கதையில் பறவைகள் எங்கே கூடு கட்டி வாழ்ந்தன?

______________________________________________

______________________________________________

- தைப்பொங்கலை எப்போது கொண்டாடுவர்?

______________________________________________

______________________________________________

- இளங்கோ அடிகள் எழுதிய மிகச் சிறந்த காப்பியம் எது?

______________________________________________

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5